

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## இயேசுவின் சினேக உத்தமம் மாபெரிது!

**தே**வன் மீது கொண்ட நேசத்தின் தழலை, அனல் குன்றாது பாதுகாப்பவனே (Preserve) உத்தம கிறிஸ்தவன்! அவர்களையே கர்த்தரும் 'பாதுகாப்பேன்' (Preserve) என வாக்குரைத்தார்! (சங்.145:20). திரண்ட தண்ணீரும், பெருவெள்ளமும் போன்ற பஞ்சமோ, பட்டயமோ, மரணமேயானாலும் தன் இரட்சகர் இயேசுவின் மீது கொண்ட சினேகத்திற்கு சிறிதும் பங்கம் வராமல் காத்தவர்களே "நேச வைராக்கியம்" கொண்டவர்கள் (உன்னத பாட்டு.8:6).

லாசரு என்ற இயேசுவின் பக்தன் வியாதி கொண்டான், மரித்தும் போனான்! ஆகிலும் இயேசுவின் மீது கொண்ட சிநேகத்தில் சிறிதும் பங்கம் வராது 'நேசத் தழலை' பாதுகாத்த அவனை ... 'நமது சிநேகிதன்!' என இயேசு அழைத்து மனம் உவந்தார்! இவ்வாறு, மரணம் சம்பவித்தும் சினேகம் குன்றா அவனை ... புதைத்து நாலு நாட்களுக்குப் பிறகு 'உயிரோடு எழுப்பி' பாதுகாத்தார்! ஆ, அவரது சினேகத்தின் உத்தமம் பெரிது, மாபெரிது! (யோவான்.11:3,11,36).

-tr

பிப்ரவரி 2019

பெட்டகம் 21

பரல்கள் 2



## தேவனை கண்டடையும் 'மெய் ஆராதனை!'

இன்றுள்ள "ஆராதனை.... ஆராதனை" எனக்கூறும் குழுக்களை கவனித்துப் பார்த்தால், அன்றைய அத்தேனே பட்டணத்தார் போலவே "அங்கு தேவன் அறியப்படவில்லை!" என்பதை நாம் பார்க்க முடிகின்றது! (அப்.17:23).

வாழ்வின் துயரத்தில், பக்தியுள்ளவனின் தேவை 'வெளிப்புறமான' அந்த ஆழமில்லாத ஆறுதல் அல்ல! அந்த தியங்கிடும் வேளையில், அவனது 'ஆழமாகிய ஆத்துமா' தன் 'தேவனாகிய ஆழத்தையே' தேடி கூப்பிடும்! ஏனோ, தானோவென்று அல்ல.... பாலை வனத்தில் தண்ணீர் இல்லையென்றால், தாகத்தால் செத்துவிடும் நிலைகொண்ட மானைப் போலவே, "என் தேவன் எங்கே?" என வாஞ்சித்துக் கதறி கூப்பிடும்! (சங்.42:1,3,7). தன் தேவனை இப்படி கூப்பிட்டுத் தேடியவனுக்கு, அவர் வருவார்! மதகுகள் திறந்து விடும் "நீர் வீழ்ச்சியாய்" அலைபுரண்டு வருவதுபோல் அவனிடம் வருவார், தாகம் தீர்ப்பார்!! (வச.7). அவரது சமூகத்தில் தாகம் தீர்ந்த அவனுக்கு, அவரே இரட்சிப்பும் கீதமுமாய் மாறுவார்! (வச.5,11). இவ்வாறு தேவனை அறிந்து, ஆழத்தோடு ஆழம் சந்திக்கும் இங்குதான், ஒருவன் தன் நேசரோடு இனிய ஆராதனையைப் பெறுகிறான்!

*-Ed*


### 2019 'பரலோக பொக்கிஷங்கள்'

வருட சந்தா ரூ.**150/-** தயவுசெய்து உடன் **M.O** செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **மார்ச் 10-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் **3** பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**125/-** அயல்நாடு ஒரு பிரதி ரூ.**900/-** அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **'புதிது'** என்று குறிப்பிடவும். நன்றி!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com
You Tube : paralogapokkishangal

## யுத்த வீரனாய் 'தம் ஜனத்திற்காக' ஜெயம் எடுக்கும் கர்த்தர்!

*"**க**ர்த்தர் நம் பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்திருக்கிறார்!" எனக்கூறும் செப்பனியா3:17-ம் வசனத்தைப் பாருங்கள். சாத்தானுடைய ஒரே நோக்கமெல்லாம், தேவ ஜனத்தின் இருதயத்தில் "கர்த்தர் அவர்களிடம் மகிழ்ச்சியாயில்லை" என்ற உணர்வை நிரந்தரமாய் புகுத்துவதுதான்! பாவத்தில் வாழ்ந்து கொண்டிப்பவர்களிடம் தேவன் நிச்சயமாய் மகிழ்ச்சியாயிருப்ப தில்லை என்பது உண்மைதான். தன்னுடைய ஒரு பிள்ளையிடம் புற்றுநோயோ, தொழுநோயோ அல்லது சயரோகமோ இருப்பதினிமித்தம் வீட்டிலுள்ள தகப்பன் மகிழ்ச்சியாயிருப்பது சாத்தியமோ? நிச்சயமாயில்லை.*

**'தான் திரும்பவும் பூரண சுகமடைய வேண்டும் என விரும்பாத' ஒரு பிள்ளையிடம் அல்லது தொடர்ந்து தன் பாவத்தில் வாழ்ந்து கொண்டிருக்க விரும்பும் தன் பிள்ளையிடம், தேவனும் மகிழ்ச்சியாயிருக்க மாட்டார்!**

*ஆம், எந்த ஒரு தகப்பனும் மகிழ்ச்சியாயிருக்க மாட்டான்! ஆனால் இஸ்ரவேலில் சிறுமையும் எளிமையுமான மீதியான தன் ஜனத்தின்மீது தேவன் எப்போதுமே மகிழ்ச்சியாயிருக்கிறார்! என்பதை நாம் மறந்து விடக்கூடாது (செப்.3:12-17).*

*இன்று அநேகர், நான் இன்னமும் இயேசுவைப்போல் மாறவில்லை..... ஆகவே, தேவன் குறைவாகவே என்மீது மகிழ்ச்சியாயிருப்பார் என எண்ணிக் கொள்கிறார்கள். உண்மை என்னவென்றால் நாம் கிறிஸ்துவை முகமுகமாய் தரிசிக்கும் வரை குறைகள் நம்மிடம் இருக்கத்தான் செய்யும்! இதைப் பயன்படுத்தி, பிசாசானவன் கர்த்தருடைய மீதியான ஜனங்களை மகிழ்ச்சி குறையவைக்கப் பார்க்கிறான்.*

*அதுபோலவே 17-ம் வசனம் கூறுகிறபடி* "**தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்**" *என்ற வசனத்தையும் அநேகர் சந்தேகிக்கிறார்கள். பூரணமற்ற திருமண வாழ்வும், ஜீவியமும் கொண்ட நம்மை விட்டு தேவன் பிரிந்திருந்தால், அவர் இந்த பூமியில், நம் ஒருவரிடத்திலாவது வாசம் செய்திட இயலாது. மிகச்சிறந்த அப்போஸ்தலனாகிய பவுலிடம் கூட அவர் வாசம் செய்திடமாட்டார்! பவுல் ஒரு சமயம் நியாயாதிபதிக்கு முன்பாக*

நின்றபோது, ஒருவன் பவுலின் கன்னத்தை அறைந்தான். ஆத்திரமடைந்த பவுல் அவனை கோபத்துடன் பார்த்து "வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையே ஏன் என்னை அடித்தாய்?" என கடுங்கோபம் கொண்டார். அந்த வேளையில் பவுல் நிச்சயமாய் இயேசுவைப்போல நடக்கவில்லை. தன்னை அறைந்த ஒரு வீரனைப் பார்த்து இயேசு அவ்விதமாய் கோபத்துடன் பேசவில்லை! இருப்பினும், பவுல் உடனடியாக தன்னுடைய கோபத்திற்கு மன்னிப்பு கேட்டார்! இச்சூழ்நிலையில் தேவன் பவுலோடு இருந்தாரா? இதுபோன்ற நேரங்களில் **'நமக்கு ஏற்படும் சந்தேகத்தையே'** பிசாசு விரும்புகிறான். அன்று பவுல் சிறையில் அடைக்கப்பட்ட போது, அந்த **சிறைச்சாலையிலும், தேவன் பவுலோடு இருந்தார்!** இதை நாம் மறந்து விடக்கூடாது. அவருக்கென்று தெரிந்து கொள்ளப்பட்ட மீதியானவர்களாகிய நம்மீது சிறுசிறு காரியங்களுக்கெல்லாம் கோபமடைந்து, நம்மை விட்டு விலகிச் செல்லமாட்டார்..... அவர் நம்மோடு இருப்பார்!

"அவர் என் பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்திருப்பார்" எனவும் 17ம் வசனம் கூறுவதை உற்று கவனியுங்கள். இந்த வசனத்தின் பொருள் சாதாரண சந்தோஷமல்ல, **ஆர்ப்பரிப்பான சந்தோஷத்தையே** தேவன் நம்மீது வைத்திருக்கிறார் என்பதேயாகும்!

**பலமுறை வீழ்ச்சியடைந்து மீண்டும் மீண்டும் எழுந்து வருகிற என்மீதா இந்த ஆர்ப்பரிப்பின் சந்தோஷத்தை கொண்டிருக்கிறார்? என்ற சந்தேகத்தையே பிசாசு நமக்கு தந்து ஜெயிக்கப் பார்க்கிறான்!**

ஆனால், அவருடைய மீதியான ஜனமாகிய என்மீதுதான் தேவன் ஆர்ப்பரிப்பான மகிழ்ச்சி கொண்டிருக்கிறார் என்பதை நாம் திட்டமாய் அறிந்திருக்க வேண்டும்! பாவியான என்மீது இயேசு காண்பித்த அன்பிற்கும் இரட்சிப்பிற்கும், நாம் ஆர்ப்பரித்து சந்தோஷப்பட முடியும்! ஆனால் இரட்சிக்கப்பட்ட பிறகும், வீழ்ச்சியுற்று எழுந்த பாவியாகிய என்மீது அவர் ஆர்ப்பரிப்பின் சந்தோஷம் கொண்டிருக்கிறார் என்ற உண்மையை தன்னுடைய சொந்த ஜனம் அறிந்திட தேவன் விரும்புகிறார்!

இத்தனை சிலாக்கியமான பங்கை தேவன் நமக்கென வைத்திருக்கிறார் என்ற உண்மையை அறிந்திருக்கிற நாம், இரண்டு பிரமாணங்களில் நிலைத்திருக்க வேண்டும். 1)தேவனுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் **சுத்த மனசாட்சியை** நாம் காத்துக் கொள்வதும், 2)எப்போதும் **தாழ்மையில்** நாம் தரித்திருப்பதுமேயாகும். நம் தனிப்பட்ட ஜீவியத்தில் யாராகிலும்

ஒருவர் நமக்கு தீங்கு செய்தால், உடனே நம்மை தாழ்த்தி விட வேண்டும். ஒரு சிறு குழுவாய் கூடி வந்து நம்மிடம் தர்க்கம் செய்தால், அதற்கு யாதொரு பதில் கூறாமல் தாழ்த்தி அமைதியாயிருக்க வேண்டும்! இவ்வாறு நம்மை அணுகும் எல்லா சந்தர்ப்பங்களிலும் தாழ்மையான வழியை தெரிந்து கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும்.

செப்பனியா.3:17 வழங்கிடும் மற்றொரு நற்செய்தி என்னவென்றால் "**கர்த்தர் தம்முடைய மிகுதியான அன்பினிமித்தம் 'மௌனமாய்' அமர்ந்து திட்டம் தீட்டுவார்**" என்பதேயாகும். உங்களுக்கு தீமை சம்பவிக்கும் நேரமெல்லாம், தேவன் இவ்வாறாகவே, உங்களுக்காக அமைதியாய் அமர்ந்து, நன்மையான திட்டங்களைத் தீட்டுவார்.

ஒரு முறை சில தீய ஜனங்கள் எனக்கு விரோதமாய் போலீஸ் காரர்களை என் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். எனக்காக கர்த்தர் அமைதியாய் அமர்ந்து திட்டம் தீட்டிய செயல் என்ன தெரியுமா? அந்த நாளில் நான் வீட்டில் இல்லாதபடி வேறு இடத்திற்குச் செல்ல தேவன் செய்த செயலேயாகும்! ஏரோது எப்படி தன் வீரர்களை அனுப்புவதற்கு முன்பாகவே, இயேசுவை பிதா எடுத்துக் கொண்டாரோ, அதுபோலவே நான் என்னுடைய ஸ்தலத்தில் இல்லாதபடி தேவன் என்னை மறைத்துக்கொண்டார். இரண்டு நாள் கழித்து என் வீட்டிற்குத் திரும்பியபோது என்னைப் பகைத்தவர்கள் செய்த தீமை ஒன்றுமில்லாமல் போய்விட்டது! இதுபோன்று எனக்கு சம்பவித்த ஏராளமான நிகழ்ச்சிகளை நான் உங்களுக்குச் சொல்ல முடியும்.

இந்த செய்தியின் சாரம் உங்கள் யாவருடைய உள்ளத்திற்கும் சென்றடைய வேண்டும். அது என்னவென்றால் "தேவன் தம்முடைய மிகுதியான அன்பினால் 'மௌனமாய் அமர்ந்து' நமக்காக திட்டம் தீட்டுகிறார்!" என்பதுதான். இதுநாள் வரை இப்படி ஒரு சாட்சி உங்களுக்கு இல்லை என்றால், இந்த வருடத்தின் முடிவிலாவது குறைந்தது இரண்டு அல்லது மூன்று நல்ல சாட்சிகளை நீங்களும் கண்டடைவீர்கள் என நான் நம்புகிறேன்.

இந்த புதிய வருடத்திற்கென ஒரு டைரியை அல்லது ஒரு கம்யூட்டர் தலைப்பை உருவாக்கி.....

"இந்த ஆண்டு தேவன் தன் அன்பின் மிகுதியினால், மௌனமாய் அமர்ந்து திட்டமிட்டு செய்த நற்செயல்கள்" என தலைப்பிட்டு அதில் எழுதுங்கள்.

இந்த முழு வருடத்திலும் ஏதாகிலும் ஒரு விசேஷித்த நிகழ்வுகளை தேவன் உங்களுக்கு செய்யும்போது, அதை எழுதி வைத்து

*கொள்ளுங்கள்! பிற்காலங்களில் 'தேதி குறிப்பிட்டு எழுதிய' அந்த நிகழ்ச்சிகளை உங்கள் பிள்ளைகளுக்கும், உங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் கூறி மகிழலாம்! பலகோடி ஜனங்களும், பிசாசின் கூட்டங்களும், உங்களுக்கு விரோதமாய் திட்டங்கள் தீட்டினாலும், கர்த்தர் உங்கள் நடுவே ஒரு யுத்த வீரனைப்போல் வல்லமையாய் இருக்கிறபடியால், உங்களுக்காக ஜெயம் எடுப்பார்! அல்லேலூயா.*

*– சகரியா பூணன்*

---

## தேவன் அனுமதித்து, என்னைத் தொடர்ந்த துன்பங்கள்!

*ஒரு விதவையாகிவிட்ட எனக்கு, என்னைச் சந்தித்த சிலுவைகள் குறைந்திடத் தொடங்கும் என்ற பொதுவான எதிர்பார்ப்பிற்கு பதிலாக, பாடுகள் பல ரூபத்தில் எனக்கு அதிகமாயின! தானும் தீமை செய்து, என் கணவரையும் தூண்டிவிட்டு விரோதித்த அந்த குறிப்பிட்ட பணிப்பெண், நான் ஒரு விதவை என்ற அனுதாபங்கூட இல்லாமல், அவள் எனக்கு அளித்த தீமைகள் சிறிதுகூட குறையவில்லை..... அதற்குப் பதிலாக, இன்னும் ஏராளமான துயரங்களை எனக்கு தரத் தொடங்கினாள். எங்கள் அரண்மனையில் பணி செய்து கொண்டே ஏராளமான பொருட்களையும், பணத்தையும் அவள் களவாடி யதையும் நான் கண்டேன். என் கணவர் மரிக்கும் வரை, வியாதிப் படுக்கையில் அவள் செய்த சேவைக்காக ஒரு பெருந் தொகையை என்னிடம் கட்டாயப்படுத்தி வாங்கிக் கொண்டாள்!*

*இந்த நிலையில், அவளுடைய ஆடம்பரமும் அகங்காரமும் அவளிடம் தலைவிரித்தாடியதைக் கண்டேன். தனக்குரிய பணிகளைகூட உண்மையாய் நிறைவேற்றாமல், சிரித்து வீணாக பொழுதைப்போக்கி கொண்டிருக்கவும் தொடங்கினாள். இதுபோதாதென, புதிய பழக்கமாய் அரண்மனையில் மது அருந்தத் தொடங்கிவிட்டாள். வெகு சீக்கிரத்தில், அதற்கு அடிமையும் ஆகிவிட்டாள். அவள் வயது அதிகமாகத் தொடங்கியவுடன், மதுப் பழக்கம் அவளுடைய சரீர சுகத்தைப் பறித்தது. அவளுடைய தீமையான மதுப்பழக்கத்தை நிறுத்துவதற்கு, நான் பலமுறை முயற்சித்தும் அதை அவள் கேட்கவில்லை.* **அவளுடைய தீய பழக்கத்தை மறைத்து, அவளை திருத்த முயன்ற என் முயற்சிகள் வீணானது.**

*ஆகவே, வேறு வழி இல்லாமல் அவளை அன்போடு திருத்தும்படி அவளுடைய ஜெப பங்கிலுள்ள பாவ சங்கீர்த்தன கன்னியாஸ்திரீ அன்னையிடம் தெரிவித்தேன். அந்த கன்னியாஸ்திரீ அன்னை, மிகுந்த அன்போடு அவளுடைய குடிபழக்கத்தை மாற்றிக் கொள்ளும்படி*

*வேண்டிக்கொண்டார்கள். என் பணிப்பெண் அதைக் கேட்டு* **சீர்திருந்த முயற்சிப்பதற்குப் பதிலாக, என்மீது கடுங்கோபம் கொண்டாள்!** *இந்த நிலையில், சாதாரண காரியத்திற்குகூட பொறுமையற்று சத்தமிடும் என்னுடைய மாமியார், என் பணிப்பெண்ணின் தீய பழக்கத்தை கேட்டவுடன், ஆத்திரமடைந்த அந்த பணிப்பெண்ணோடு, தன்னுடைய வெறுப்பையும் கை கோர்த்துக் கொண்டார்கள்! என் பணிப்பெண்ணை புகழ்ந்து நியாயப்படுத்திவிட்டு, அவளோடு சேர்ந்து என்னை நிந்தித்தார்கள்!*

*என்னை காணும்படி நண்பர்களோ அல்லது உறவின பெண்மணிகளோ வரும்போது, அவர்கள் யாவரிடமும் என்னை சுட்டிக்காட்டி "என் எஜமாட்டி என்னை கனவீனப்படுத்துகிறாள்! ஏராளமான சஞ்சலத்தை கொடுக்கிறாள்! எப்போதுமே கடுஞ் சொல்லை வைத்து திட்டுகிறாள்!" என துணிகரமாய் பொய்கூறி கூச்சலிட்டு கூறினாள். அச்சமயங்களில் 'தேவன் எனக்குத் தந்த' அளவற்ற பொறுமையை எண்ணி நான் வியந்தேன். அவள் தீமையாய் என்னிடம் கேட்ட எல்லா கேள்விகளுக்கும், அமைதியோடும் அன்போடும் பதில் தந்தேன். நான் அவளை எந்நிலையிலும் நேசிக்கிறேன் என்பதை விளங்கச் செய்வதற்கான எல்லா முயற்சிகளையும் நான் எடுத்துக் கொண்டேன்!*

*அப்படியிருந்தும், என்மீது பாசம் நிறைந்த என் உறவினர்களோ அல்லது சிநேகிதிகளோ என்னை காண வந்து, எனக்காக வரவேற்பறையில் காத்திருப்பார்கள்.*

நான் வரவேற்பறைக்கு வருவதற்கு தாமதமாகும் அந்த 5 நிமிடங்களில், வந்த அவர்களிடம் என் பணிப்பெண் அமர்ந்து "என் எஜமாட்டியின் கணவருக்கு நான் மிகுந்த அன்புடனும் தியாகத்துடனும் நான் அயராத பணி செய்ததற்காக, என் எஜமாட்டி எப்போதும் என்மேல் பொறாமையும், கோபமுமாயிருக் கிறார்கள்!" போன்ற தீய வார்த்தைகளை துணிகரமாய் விதைத்தாள்!

*எனக்கு உதவிடும் பணிகளுக்கு அவள் ஏனோதானோ என்று வராதிருக்கும் நேரமெல்லாம், நானே என் பணிகளை ஏற்று செய்து முடித்தேன். அவள் என்னுடைய அறைக்கு வந்து பணி செய்ய வந்த நேரமெல்லாம், அதிக சத்தமிட்டு, என்னை அவமதித்து வெறுப்பையே என்னிடம் காட்டினாள்!*

*நான் சுகவீனப்பட்டு, சரீர சோர்வடைந்த வேளையில், எனக்கு அவள் பிரயோஜனமாய் உதவுவதற்குப் பதிலாக, தனக்கும் ஏதோ சரீர பெலவீனம் என்று ஓய்வறைக்குப் போய்விடுவாள்! இப்படி ஒரு வேதனையான சூழ்நிலைகளின் மத்தியில், நான் ஆண்டவரை நோக்கி*

"ஓ கர்த்தாவே! சகலமும் உம்முடைய நன்மையான கரத்திலிருந்தே எனக்கு வருகிறது! என உணர்கிறேன். உம்முடைய அனுமதி யில்லாமல், என் பணிப்பெண் 'அவளாகவே' எனக்கு தீங்கு செய்திட முடியாது! **எனக்குத் தொடர்ந்து தீங்கு செய்வதை, அவள் சிறிதுகூட உணராமல் இருப்பதும் 'உம்முடைய அனுமதி' என்றே கருதுகிறேன்!** எனக்கு துன்பம் தருவதற்கென நீர் பயன்படுத்திய அனைவருமே 'தாங்கள் உமக்கு ஊழியம் செய்வதாக' எண்ணிக் கொண்டிருப்பதையும் காண்கிறேன்!" என, தேவனுடைய தீர்மானத்திற்கு என்னை முற்றிலுமாய் ஒப்புக்கொடுத்து, ஜெபித்து, மன ஆறுதலடைந்தேன்!

– மேடம் குயான்

---

## உலக கண்களுக்கு தோல்வி, ஆவிக்குரியவனுக்கு ஜெயம்!

**ஒ**ரு சூழ்நிலைக்குள் பிரவேசிக்கும்போது, அந்த சூழ்நிலையின் சூறாவளிக்குள் சுழன்று வெளியே வந்தவன் தோற்றுப் போனானா? அல்லது ஜெயம் பெற்றானா? என தெளிவுபட காண்பது ஒரு மனுஷீகமான கிறிஸ்தவனுக்கு கடினமேயாகும். அது ஏனென்றால், **'தோற்றுப்போனதைப் போல்'** நம் கண்களுக்கு புலப்பட்டவை, மெய்யான ஜெயம் பெற்றதாய் மிளிர்வதை பிற்காலங்களில் அவர்கள் கண்டு வெட்கமடைந்திட முடியும்!

'இந்த ஜெயத்தின் அமைதியில்' இயேசு வாழ்ந்தபடியால், சூறாவளி போல் தோன்றிய மரணத்திற்குத் தன்னை அவர் ஒப்புக்கொடுக்க முடிந்தது! இருள் புலர்ந்து 'விடிவெள்ளி தோன்றும்' என்ற உண்மையை சாந்தகுணம் கொண்ட இயேசு அறிந்திருந்தார். இந்த முழு உலகத்திற்கும் வெளியரங்கமாய் தோன்றிய அவருடைய தோல்வி, முழு மானிட வர்க்கத்திற்கும் 'மகிமையான இரட்சிப்பை' மலரச் செய்யும் நிகழ்ச்சியாய் முடிந்தது!

**நம் ஆண்டவரின் சிலுவை மரணம், உலகத்தின் பார்வையில் முற்றிலும் தோல்வியாகவே இருந்தது!** அங்கீகாரம் பெற்ற மார்க்கவாதிகள், அதில் வீற்றிருந்த மூப்பர்கள், தலைவர்கள் இயேசுவின் தோல்வியை எள்ளி நகையாடி மகிழ்ந்தார்கள். ஒருகாலத்தில் அவரைப் புகழ்ந்து வந்த சமுதாயம் 'இவனை அகற்றும்!' என புறக்கணித்ததைக் கண்டு அந்த மார்க்கவாதிகள் மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரித்தார்கள்! அவரோடு இருந்த நண்பர்கள்கூட அவரை கைவிட்டார்கள் என வேதபாரகரும் ஆசாரியர்களும் குதூகலம் கொண்டார்கள்! இயேசுவின் தோல்வியை கொண்டாடி மகிழ்ந்த அவர்களின் குதூகலம் ஒரு நாள் அல்ல, இரண்டு நாள் அல்ல, மூன்று நாட்கள் பூரண மகிழ்ச்சி கொண்டாடினார்கள்.

**இயேசுவின் தோல்வியை கண்டு மகிழ்ந்த ஜனங்களை, பிதா வானத்திலிருந்து உற்று நோக்கினார். பின்புதான் "மரணத்தில் - உயிர்த்தெழுதல்" என்ற மகத்துவ நிகழ்ச்சியை ஜெயமே ஜெயம் என நிகழ்த்தி காண்பித்தார்! ஆம், கிறிஸ்து மகிமையாய் உயிர்த்து, ஜெயித்தார்!**

*இதுபோன்ற ஜீவ நதி, இன்றுள்ள பெரும்பாலான சபைகள் கற்றுக் கொள்ளவே இல்லை. ஆகவேதான் அவர்களின் சபை மனுஷீகத்தில் ஊறிய, மனுஷீக வெற்றிக்கே போதை கொண்ட சபைகளாய் இருக்கிறது! இதுபோன்ற மார்க்க சம்மந்த மனுஷீகமே அவர்கள் விரும்பும் 'உடனடி வெற்றிக்கு' நாட்டம் கொள்ளச் செய்கிறது. 'அதுவே போதுமென' இன்றுள்ள சபைகள் தங்கி விட்டார்கள். ஆவிக்குரிய வெற்றியின் அனுபவம் இவர்கள் கண்களுக்கு புலப்படவேயில்லை. ஆ, இது இன்றைய சபைகளின் துயரம்!*

*மனுஷீக வெற்றிக்கு துணைபோக "ஒத்தவேஷமே" இவர்களுக்கு கைக்கொடுக்கிறது! யாதொரு இடுக்கமும், நெருக்கமும் இவர்களுக்கு ஏற்படுவதேயில்லை! ஆவிக்குரிய யுத்தகளமும் இவர்களுக்கு இருப்பதில்லை! போரின் வெம்மையிலிருந்து ஓடி ஒழியும் ஒரு கிறிஸ்தவனைக் குறித்து சாத்தான் சிறிதும் அஞ்சுவதில்லை! தன்னை யுத்த களத்திலிருந்து விலக்கி ஓடுபவன் "சமாதான - தேக்க நிலையில்" விழுந்து மடிகிறான். நித்தியத்தின் புத்திரர்கள் 'இதுபோன்ற சமாதானத்திற்கு' ஒருபோதும் கை கொடுப்பதில்லை. தாங்கள் சந்தித்த வெம்போரில் நிமிர்ந்து நின்று மரிப்பார்களேயல்லாமல், கோழையான வெற்றிக்கு அவர்கள் கை கொடுப்பதில்லை.* **வெம்போரில் மரித்து உயிர்த்த** *தங்கள் குருவை மன உறுதியுடன் பின்பற்றும் தீரர்கள் இவர்களே!*

*– A.W. டோசர்*

---

## இருளிலிருந்து ஒளியை பிரித்திட, பகுத்தறியுங்கள்!

*இந்த உலகில் எண்ணற்ற வேறுபாடுகள் மறைந்துள்ளன. தெளிவாய் தோன்றுகிறபடி வெளிச்சத்தையும் - இருளையும் தனித்தனியே கண்டு வேற்றுமை அறிவது நம் ஒருவருக்காகிலும் கஷ்டமில்லை. அதுபோலவே கசப்பையும் - இனிப்பையும் ஒரு சிறுபிள்ளைகூட வேற்றுமை காண அறிந்து கொள்ள முடிகிறது!* **துர்நாற்றத்தையும், நறுமணத்தையும் வேறுபாடு காண விசேஷித்த வரம் ஒன்றும் தேவையில்லை!** *ஆனால் மனுஷனுடைய மனசாட்சியானது மறைந்திருக்கும் பொருளாய் ஒருவனுக்குள் இருக்கிறபடியால், அந்த மனசாட்சி தூய்மையாய் உள்ளதா? அல்லது தீது படிந்ததா? எனக் கண்டறிவது வெகு கடினமேயாகும். ஒரு கைவினை கலைஞன்*

அழகுள்ள நிறங்களையும், மதிமயங்கச் செய்யும் காட்சிகளையும் தன்னுடைய கைவண்ணத்தில் பிரித்து வைத்து காட்டுவதும் எளிதுதான். ஒரு பாடகன் பாடலின் இனிமையையும் சுரத்தையும் தெளிவுபட அறிந்திருப்பான்.

ஆனால் நான் கூறுவதோ, மனசாட்சியின் தூய்மையை அல்லது அதில் மறைந்த அழுக்கை கண்டு பகுத்தறிவதற்கு, இந்த உலகில் உள்ள யாவருமே தடுமாறுகிறார்கள்! அவனவன் தன் தன் வழியில் நடப்பதற்கு காரணமும் இதுவேதான். அவன் தீமையான வழியை தெரிந்து கொண்டு, தனக்கு சார்பாக நல்லதென்று எண்ணிக் கொள்கிறான்.

**முடிவாக நாம் கூற வேண்டுமென்றால், ஒருவன் தன் சொந்த மனசாட்சியின் தூய்மையை கண்டறிந்து வாழ்வது ஒன்றே 'பகுத்தறியும் தன்மையை' நம்மிடம் வளரச்செய்யும்! அவ்வாறே பிறருக்கும் நீங்கள் பகுத்தறிந்து உதவிச்செய்வதே, ஓர் நித்தியமான உதவியாகும்.**

ஆனால், உங்கள் மனசாட்சியை சுத்தமுள்ளதாய், அசுத்தத்தி லிருந்து பிரித்து பகுத்தறிந்து வாழாவிட்டால், மற்றவர்களிடத்திலுள்ள மனசாட்சியில் அடங்கியிருக்கும் தீமையை உங்களால் பகுத்தறிந்து விடுதலை செய்ய, உங்களால் ஒருக்காலும் முடியாது. ஒருவன் தன் மனசாட்சியில் தூய்மைக்கு மேல் தூய்மை கொண்டு வரும் பாக்கியம் **வேத வசனம்** ஒன்றிற்கு மாத்திரமே உண்டு! தேவன் தன் வார்த்தையை அனுப்பி இருளிலிருந்து வெளிச்சத்தை பிரித்தார். இதற்கு இணையான, பகுத்தறிந்து வேறு பிரிக்கும் வல்லமை, ஜெப தியானத்திற்கே உண்டு!

**வேத வசனமும் - ஜெபமும் இணைந்த ஜீவியம் ஒரு மெய் கிறிஸ்தவனுக்கே அல்லாமல், இந்த உலகில் வேறு ஒருவனுக்கும் இல்லை.** நீங்கள் எவ்வளவு அதிகம் தேவனுடைய சமூகத்தில் காத்திருக்கி றீர்களோ அந்த அளவிற்கு மாத்திரமே உங்கள் உள்ளான மனக்கண்கள் பிரகாசித்து பயனுள்ளதையும், பயனற்றதையும் மனசாட்சியில் பிரித்து பார்த்திட முடியும்! காணாத நித்தியத்தையும் காண்கின்ற அநித்திய உலகத்தையும், ஜெப ஜீவியத்தில் ஓங்கியவன் மாத்திரமே தெளிவாய் கண்டறிவான்.

தெய்வ சினேகத்தில் கொண்ட தியானம்.... அவனுக்குள் தெய்வ பயத்தையும், தெய்வ அன்பையும் ஏராளமாய் ஊற்றிட முடியும். தன் உண்மையான மனசாட்சியின் தன்மையையும், ஆத்துமாவிலும் ஆவியிலும் கொண்ட அசுசியையும் அவன் தெளிவாய் காண்பான்! இவ்வாறு தேவனோடு உறைந்த சாந்தகுணமே உலகத்தை வென்றிடும்! 'உலகம்' அந்தகாரத்திற்கும் 'பூமி' தேவனுக்கும் சொந்தம்!

*சாந்தகுணமுள்ளவன் மாத்திரமே தன்னிலுள்ள உலகத்தை பிரித்து, பூமியைச் சுதந்தரிப்பான். அந்த சாந்தகுணமுள்ளவர்களே பூமியை சுதந்தரிப்பார்கள் என மலைப் பிரசங்கத்தில் இயேசு கூறிய வார்த்தை, நமக்கு சவாலாய் மாறட்டும்! வேத வாக்கிய சிநேகமும், ஜெப தியானமும் நம்மில் ஓங்கி மலரட்டும்! அப்போது, இருள் சிறிதேனும் இல்லாத அல்லது இருளை முற்றிலும் புறக்கணித்து ஒளியில் வாழும் பரிசுத்தர்களாய் நாம் மாறுவோம் என்பது உறுதி!*

*– சாது சுந்தர்சிங்*

---

## உலக ஐஸ்வர்ய செழிப்பா? ஆவிக்குரிய வளர்ச்சியா?

***மி****ஷனெரிமார் நம் தேசத்தில் செய்துள்ள ஊழியங்களை மறக்க முடியாது. ஆத்தும பணியோடு, ஏழை ஜனங்களுக்காக அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயங்களும், கல்விச்சாலைகளும், ஆஸ்பத்திரி களும், கைத்தொழிற்சாலைகளும், அணைக்கட்டுகளும், அவர்களின் அன்பின் ஊழியங்களுக்கு ஞாபகச் சின்னங்களாக இருக்கின்றன. மேல் வகுப்பாரால் ஒடுக்கப்பட்டுத் தவித்த குடும்பங்களையும், கிராமங்களிலுள்ள ஏழை ஜனங்களையும் தலை நிமிரச் செய்த மாறுதல்கள் கொஞ்சமல்ல!* **மிஷனெரிமார், இவர்களைச் சபைகளில் கொண்டு வந்து, வேத வாக்கியங்களை கற்றுக்கொடுத்தார்கள்.** *மற்றவர்களால் அற்பமாக எண்ணப்பட்ட இவர்களிலிருந்து புறப்பட்ட போதகர்கள் எத்தனை! பிரசங்கிகள் எத்தனை! உபாத்தியாயர்கள் எத்தனை! வைத்தியர்கள் எத்தனை! சர்க்கார் அதிகாரிகள் எத்தனை!*

*பெற்றுக்கொண்ட கல்விக்கும் சம்பாத்தியத்திற்கும் தக்கபடி உடை நடை பாவனைகளில் மேன்மையும் நாகரீகமும்கூட பெற்றோம்!*

**ஆகிலும், வாழ்க்கையின் முன்னேற்றத்தை, பக்தி மார்க்கம் என்று நினைத்துக்கொள்ளக்கூடாது.** *அவபக்தர்களான அநேகர், மேலான பதவிகளிலிருந்து செல்வமாய் வாழுகிறதைக் காண்கிறோம். மிஷனெரிமார் குருக்களுடைய ஊழியம் இந்தப் புறம்பான சீர்திருத்தங்களோடு முடிந்துபோகவில்லை. நமது இரட்சகர், இந்தப் புறம்பான அந்தஸ்தையும் நாகரீகத்தையும் கொடுக்கும்படி தமது ஜீவனை விட்டவரல்ல! பணமுண்டானால் இப்படிப்பட்ட முன்னேற் றத்தை யாரிடத்திலும் காணலாம். பணம், பாவிகளை இரட்சிக்காது!*

*ஓர் சமயம், ஒரு பிராமண உத்தியோகஸ்தரிடம் கிறிஸ்துவைப் பற்றிப் பேசினபோது, அவர்: "எங்களுக்கேன் உபதேசிக்கிறீர்கள்? பகவான் செயலால் எங்களுக்கொரு குறைவுமில்லை. அந்த தாழ்ந்த*

*வகுப்பாரை வேதத்தில் சேர்த்து, அவர்களை முன்னுக்குக் கொண்டு வாருங்கள்" என்றார். அவர் கண்ட கிறிஸ்து மார்க்கம் அவ்வளவுதான்.*

*இன்றும், அவரைப்போலவே அநேகர் நினைத்துகொண்டிருக் கிறார்கள். வேதத்தில் சேர்ந்தால் படிப்பு, உத்தியோகம், பிழைப்பு, கல்யாணம் நடக்கும் என்று பொதுவாய் பேசிக்கொள்கிறார்கள். அவைகளல்ல, அவைகளைப் பார்க்கிலும் மேலான ஆசீர்வாதங் களைப் பெற்றிருக்கிறோம் என்று காட்ட வேண்டியது நமது கடமை! அப்படிப்பட்ட இரட்சிப்பின் மாறுதல் நம்மில் உண்டா? இல்லையென்றால் இந்தக் கல்வியும், அந்தஸ்தும், சம்பாத்தியமும்.... மேட்டிமைக்கும் சகலவித சங்கடங்களுக்குமே ஏதுவாகும்.*

*இப்படிப்பட்டவர்களாலே சபைகளில் குதர்க்கங்களும் பிரிவினைகளும் உண்டாகிறதென்பதை அறிவோம்.* **அந்தஸ்தில் உயர்ந்தோமே தவிர ஆவியில் உயர்ந்தோமில்லை!** *ஆகையால் மிஷனெரிமார் எவ்வளவுக்குப் புறம்பான நன்மைகளைச் செய்கிறார் களோ,* **அவ்வளவுக்கு அதிகமாய்** *தங்கள் விசாரணைக்குட்பட்ட வர்களின் ஆத்தும இரட்சிப்புக்காக உழைக்கவும் வேண்டும்.*

*பற்பல வேலைகளை மேல் விசாரணை செய்வதும், சம்பளம் போடுவதுமே தங்கள் வேலை என்று நினைக்கக்கூடாது. தேவ பக்தியுள்ள ஒரு மிஷனெரி: "வேலைகளை மேல் பார்க்கவும், சம்பளம் போடவுமா நான் சீமையிலிருந்து இந்தியாவுக்கு வந்தேன்? மற்றவர் களை கிறிஸ்துவிடம் நடத்துகிறதற்கல்லவோ நான் என்னை ஆண்டவருக்குப் பிரதிஷ்டை செய்து வந்தேன்" என்று விசனத்தோடே கூறினார். நமதாண்டவர், ஊழியர்களை ஏற்படுத்தி, மேல் விசாரணை செய்யும்படி வந்தவரல்ல! அவர் தாமே, இடைவிடாது உழைக்கும் ஊழியனாக வந்தார். "நான் ஊழியங்கொள்ளும்படி வராமல்* **ஊழியஞ் செய்யவே வந்தேன்**" *என்ற மகிழ்ச்சியே, ஒரு இயேசுவின் ஊழியனுக்கு எப்போதும் இருக்கும்!*

*– பரமானந்தம் ஐயர்*

---

## ஜெப ஜீவியம் குறைவது, பெரு நஷ்டமல்லவா?

**ஜெ***ப மாந்தர்கள் எஃகு இரும்பைப்போல் உறுதியுள்ளவர்களா யிருக்க வேண்டும்! ஏனெனில், அவர்கள் சாத்தானுடைய இராஜ்ஜி யத்தை தகர்ப்பதற்கு எழுவதற்கு முன்பாகவே, சாத்தானால் தாக்கப் படுவார்கள். ஜெபம் என்பது, சர்வ வல்ல தேவனிடம் சமர்ப்பிக்கும் ஒரு வேண்டுதல் கடிதமாக மாத்திரமே அனேகர் வைத்திருக்கிறார்கள்! கிறிஸ்தவ வாழ்க்கையை நிலை குலையச் செய்த அனேக காரியங் களைப் போலவே,* **ஜெபமும் இன்று நிலை குலைந்து கிடக்கிறது!**

கர்த்தருக்கென்று முனைந்திடும் அனலான ஊழியத்திற்கு மாற்றாக 'ஜெபம்' இருப்பதில்லை! அதுபோலவே, ஜெபத்திற்கு மாற்றாக 'அனலான ஊழியம்' என்பதும் இல்லை! "நம்முடைய ஊழியங்களில் தவறு ஏற்படலாம்! ஆனால் நம்முடைய அசதியினால், ஜெபத்தை தவறவிடக்கூடாது" என பக்தன் *E.M.பவுண்ட்ஸ்* கூறினார்.

*மேலும் அவர் கூறும்போது, தேவனை அறியும் அறிவை உயர்த்தி காண்பிக்கவும்! தன் ஊழியப் பணியை இந்த பூமியில் முழு பெலத்தோடு செய்து முடிக்கவும்! சபைக்குள் சீறி எழும்பும் தீமை அலைகளை தடுப்பு சுவராய் நின்று காப்பதும்! ஆகிய இந்த சீரிய பண்பு,* **'ஜெபிக்கும் சபைக்கு'** *முன்னோடியாய் நிற்கும் தலைவருக்கு மாத்திரமே உண்டு! இவர்களையே தேவன் சார்ந்து கொள்கிறார்.... இவர்களுக்கே தன் பணிகளை ஒப்படைக்கிறார்.... இவர்களையே தன் உன்னத பெலத்தால் ஆசீர்வதிக்கிறார்!*

*இன்று, ஜெப ஜீவியம் கொஞ்சம் கொஞ்சமாய் மங்கிப் போகிற படியால், கர்த்தருடைய எழுப்புதல் சுடரொளி அணைந்துபோகிறது. ஜெப மாந்தர்களுக்கு மாத்திரமே சாத்தான் பயந்து நடுங்குகிறான்.... வேறு எதுவும் அவனை அச்சுறுத்த முடிவதில்லை!*

*ஒரு சீரிய உன்னத வாழ்விற்கு, ஒரு நீண்ட வாழ்க்கை வாழ்ந்திட வேண்டும் என்பது அவசியமில்லை. 28 வயது மாத்திரமே கொண்ட ஓர் இளைஞன், 100 வயதிற்குரிய ஞானத்தோடு மரித்திட முடியும்! பனி பொழியும் தேசத்திற்கு ஊடுருவச் செல்லும்* **ஒரு தும்பி பூச்சி,** *தன் இறகுகளை இழந்தாலும், அந்த பனியை தாங்குவதற்கு அதன் உடலைச் சுற்றியுள்ள பச்சை கலந்த ஊதா நிற கவசம்,* **தும்பிக்கு** *அனுகூலம் செய்கிறது. தும்பியின் உடலை சூழ்ந்து இருக்கும் பச்சை கலந்த ஊதா நிறம் உலகின் எந்த ஒரு மலருக்கும் இல்லை. இந்த தும்பியின் உடலை மூடியிருக்கும் கவசத்தைப் போலவே ஜெபம் என்னும் விசைத்தறி ஜெப வீரனுக்கு பாதுகாப்பு கவசத்தை நெய்கிறது! அதன் அழகு ஊதா கலந்த பச்சை நிறம் 'கிறிஸ்துவின் பாடுகளில் தோய்த்து' வண்ணம் தீட்டப்படுகிறது!*

*ஹென்றி மார்ட்டின் என்ற பக்தன் வாழ்ந்த காலத்தில், அவருடைய உயர்ந்த ஆவிக்குரிய தன்மை கண்டு அவரது சக ஊழியர்கள் பொறாமைப்பட்டனர்! ஒரு சக ஊழியன் அவரைப் பற்றி கூறும்போது "அவரது பக்தி அளவிட முடியாதது! எந்த விஷயத்திலும் கொண்ட ஜாக்கிரதை மேலானது! உலகத்தை அடிமையாய் வைத்து கொண்ட அவரது செயலும், ஆத்துமாக்களின் மீது கொண்ட அவரது அன்பும், ஆத்துமாக்களின் நன்மைக்காகவே அவர் செய்த*

*பிரயாசங்களும், கிறிஸ்துவின் ஆழம் அனுபவித்த அவரது வசீகரமும் நாணேற்றிய அவரது பரலோக தொடர்பில் குறைவில்லாத அவரது பந்தமும், எங்களை மெய்சிலிர்க்கச் செய்தது!"* என கூறினார்.

*அப்படி அவர் ஜீவியமும் ஊழியமும் பொறாமைக்குரியதாயிருந்த போதிலும், ஹென்றி மார்ட்டினோ, "என் தனி ஜெபத்தில், இரட்சிக்கப்படாத ஜனங்களுக்காக நான் ஜெபித்திடும் ஜெபம், போதுமான வல்லமையும் ஊக்கமும் இல்லாதிருப்பதை நான் கண்டு வருந்துகிறேன்! அழியும் ஆத்துமாக்களைக் குறித்த வெளிச்சத்தை நான் பெற்றிருந்தும், அந்த அளவிற்கு அனல் கொண்ட ஜெபம் என்னிடம் இல்லையோ? என்றே வருந்துகிறேன்" என தாழ்மையுடன் கூறினார். பக்தர்களின் நிலை இவ்வாறாயிருக்க,* **நாம் ஜெப ஜீவியத்தில் குறைந்து வருவதை,** *நம்மால் ஏன் கண்டு கொள்ள முடியவில்லை? மீண்டு, வருவோமாக! 'ஜெப ஜீவிய' குன்றின் உன்னதமுனை சேர்வோமாக!*

*– லியோனார்டு ரேவன்ஹில்*

---

## "எங்களைப் போலவே சபை!" என உலகம் கூறுவது வேதனை!

*"அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக" என்ற கிறிஸ்துவின் இந்த உத்தமமான சிந்தையே, ஒரு மனந்திரும்பிய விசுவாசிக்கும் இருந்திருக்க வேண்டும் (பிலி.2:4). 'தனக்கானதைத் தேடும் ஆதாயம்' வியாபார உலகத்திற்கு சொந்தமானது.* **சபைக்குள் ஒரு கிறிஸ்தவன் பிரவேசிக்கும்போது அவன் தீர்மானித்து வரவேண்டிய நோக்கம் என்னவாயிருக்க வேண்டும்?** *இந்த உலகத்தை வெறுக்க வேண்டும்! தேவனுக்காக வாழ வேண்டும்! பரிசுத்தாவியினால் நடத்தப்பட வேண்டும்! தேவனுடைய உன்னதமான அன்பை சுதந்தரிக்க வேண்டும்! சுயத்தை மறுக்க வேண்டும்! எல்லா மனுஷருக்கும் நன்மை செய்ய வேண்டும்! ஆகிய தீர்மானங்கள் அவன் உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளமாய் நிறைந்திருக்க வேண்டும்.... அப்போது மாத்திரமே, அவன் உலகத்தையும், அதன் கனத்தையும் அல்லது அதன் ஐசுவரியங்களையும் தேடவில்லை என்பதை நிரூபிக்கிறான். கர்த்தருடைய மேஜைக்கு முன்பாக இந்த உத்தம கிறிஸ்தவர்கள் கூடிவரும்போது, நொறுங்குண்ட நம்முடைய இரட்சகரின் சரீரத்தின் மீதே தங்கள் கரங்களை வைக்கிறார்கள்....*

அதன் பொருள் என்ன என்பதை நீங்கள் அறிந்துதான் அவருடைய மேஜைக்கு முன்பாக வந்தீர்களா? அவருடைய நொறுங்குண்ட ஜீவிய சாசனத்தில் உறுதிமொழி பூண்டு அவர் அடிச்சுவட்டையே நானும் பின்பற்றுவேன் என்ற தீர்மானத்தை தொடர்ச்சியாய் அறிக்கை செய்வது அல்லவோ, கர்த்தருடைய மேஜை!

ஆனால், அவருடைய மேஜைக்கு முன்பாக வந்த அனேகர் செய்யத் துணிந்தது என்ன? உலகத்தை நேசித்து, இந்த உலகத்தின் அனைத்து ஆதாயங்களையும் இலக்காய் முன் வைத்து செல்லும் மானிடர் கூட்டத்தில் அல்லவோ நீங்களும் நின்று கொண்டிருக் கிறீர்கள்! இதுதான் நீங்கள் செல்லும் வழி என்றால், அதிலிருந்து மனம் திரும்ப வேண்டுமல்லவா? தேவனுடைய வழியை பின்பற்றுவேன் என வாக்குறுதி செய்துவிட்டு, இந்த உலகத்தின் வியாபார இலாப நோக்கை மனதில் கொண்டு பின்பற்றுவது **கிறிஸ்துவின் சரீரத்திற்கு செய்திடும் துரோகமல்லவா?**

உலகத்தோடு ஒத்து வாழ்வது 'சுவிசேஷத்தின் பிரதான சாசனத்தை' மீறுவதாகும். இதுபோன்ற கதியில் வாழும் கிறிஸ்தவர்களை காணும் அவிசுவாச உலகத்தார், மெய்யான சுவிசேஷம் என்ன என்பதையும் அதன் உயர்ந்த தாற்பரியத்தையும் எப்படி அறிந்து கொள்வார்கள்? சபையில் வாழும் கிறிஸ்தவர்களை, அவர்கள் கேட்கும் சுவிசேஷம், இந்த உலக சினேகத்திற்கும் அதன் மகிமைக்கும் மேலாய் உயர்த்தி உயர்ந்த ஸ்தானத்தில் நிற்க வைத்திருக்க வேண்டுமல்லவா?

அப்படியில்லாமல் "நம்மைப் போலவே இந்த கிறிஸ்தவர்களும்" என உங்களைச் சுற்றியுள்ள பாவிகள் காண நேர்ந்தால், சுவிசேஷத்தின் உன்னத சாரம் அவர்களை விட்டு விலகிப் போகுமல்லவா?

உங்களைச் சுற்றியுள்ள உலகத்தார் பரமசிந்தை இன்னதென்றும், சுய-வெறுப்பு இன்னதென்றும், மனம் திறந்த தயாளம் இன்ன தென்றும்.... எப்படி அறிவார்கள்?

இந்த உலகத்தோடு சமரசமாய் கைகோர்த்து வாழும் ஆவி, 'தெய்வ சினேகத்தை' சபையிலிருந்து அகற்றி, அதை கறையானைப் போல் அரித்து விட்டதை கண்டீர்களா? ஒரு இளம் விசுவாசியின் இருதயம் அனல் கொண்டதாய், அவனுடைய உதடுகள் தெய்வ அன்பின் தீப்பொறி கொண்டதாயும் இருப்பதை, நீங்கள் கண்டிருந்ததாக 'இன்று' கூறமுடிகிறதா?

அந்த இளம் விசுவாசி, இந்த உலகத்தின் பின்னே ஏன் சென்றான்? அவனைக் கூப்பிட்டு கேட்க வேண்டியது சபையின் கடமையல்லவா? உலகத்திற்கு திரும்பிவிட்ட அவனுடைய சிந்தை வாழ்க்கையின் ஐசுவரியத்தையும் கனத்தையும் அவனுக்கு நினைப்பூட்டி, அதை பேரார்வத்தோடு தொடர்ந்து பின்பற்றி வாழ உற்சாகத்தை தந்திருக்க வேண்டுமல்லவா?

இவ்வாறு உடனடியாக நீங்கள் செய்யத் தவறினால், ஒரு வருடம் தாண்டிவிட்டால், அவனுடைய இருதயத்தில் எரிந்து கொண்டிருந்த தெய்வ அன்பு முற்றிலுமாய் அணைந்து போயிருக்கும்! இனி அவன் வேதம் வாசிப்பதும், ஜீவிப்பதும், பெயரளவிற்கு சபைக்கு வருவதும் "கிறிஸ்தவ மார்க்கத்தாருடைய மழுங்கிய மனசாட்சியாகவே இருக்கும்!". ஆ, இது துயரம்.

**உலக சமரசம் சபைக்குள் வந்துவிட்டால்,** பாவிகளுக்கு சுவிசேஷம் கூறி சபைக்கு அழைப்பது பகற்கனவாய் போய்விடும்! உலகத்தின் பொல்லாத மனுஷர்கள் ஒரு வழக்கமான கிறிஸ்தவனை பார்க்கும் போது என்ன எண்ணுகிறான்? உலகத்தின் இலாப நோக்கங்களை மனதில் வைத்து தன் இச்சையின்படி வாழும் அந்த கிறிஸ்தவன்.... வேத போதனைகளை தானும் விசுவாசிப்பதைப்போல் பாசாங்கு செய்வதை யல்லவா, அவன் காண்பான்! அந்த உலகத்தான் கூறுவதெல்லாம் **"நாங்கள் செய்வதைத்தான், இந்த கிறிஸ்தவர்களும் செய்கிறார்கள்!** எங்களைப்போலவே உலகத்தின் ஆசையையும், கனத்தையும் தேடுகிறார்கள்! நாங்கள் இருப்பதைப்போலவே வாழும் இந்த கிறிஸ்தவம் எங்களுக்குத் தேவையில்லை!" என்றல்லவா கூறி விடுகிறார்கள்!

இந்த உலகத்தான் சபையைப் பற்றி கூறுவது, பொய் குற்றச்சாட்டு அல்ல. ஏனெனில் இன்றுள்ள அநேக சபைகள், உலகத்தில் முதன்மையாய் இருக்கும் போட்டியில்தான் ஓடிக்கொண்டிருக் கிறார்கள்! இந்த உலகம் குன்றில் நின்று கொக்கரிப்பதெல்லாம் "பார் அந்த சபையை! உலகமாகிய என்னை விட அவர்கள் எந்த விதத்திலும் மேலானவர்கள் அல்ல. என் உலகத்தின் சாரங்கள் என்னவோ.... அதைத்தான் அவர்களும் வைத்திருக்கிறார்கள், நாடுகிறார்கள்!" திரும்ப வேண்டும்! **ஆம், சபை திரும்பவேண்டும்! உலகத்திற்கு புறமுதுகு காட்டி தேவனுடைய நேர் திசையில் திரும்பவேண்டும்!** அப்போது மாத்திரமே, கிறிஸ்துவின் மகிமைக்கென சபை பிழைத்திருக்கும்!! ஆமென்.

– *சார்லஸ் ஃபின்னி*

---

## குற்றம் செய்யும் ஆத்துமாவை சிட்சிப்பதும், தெய்வ சினேகமே!

**எ**ன் ஆசிரமத்தில், நான் கிறிஸ்துவுக்கென உருவாக்கி வந்த ஜனங்கள் குற்றங்களில் ஈடுபடுவதைக் கண்டேன்! ஒருபுறம் அவர்கள் மீது ஆத்திரம்! மறுபுறம் அவர்கள் குற்றங்களைக் கண்டும் காணாமல் விட்டு விடலாமா? என்ற சுய நல போராட்டம். இந்த இரண்டுமே தவறு என்பதைக் கண்டேன். ஜனங்களின் குற்றங்களைக் கண்டு

*அடைந்திடும் 'ஆத்திரம்' கல்வாரி அன்பிற்கு உகந்ததல்ல! அது போலவே குற்றங்களைக் கண்டும் காணாமல் விட்டு விடுவதும் 'தேவனுடைய பரிசுத்த அக்கினிக்கு' விரோதமானது! என்பதையும் நான் அறிந்து கொண்டேன். இந்த உலகம் கூறுகிற அன்பு வேறு, வேதம் உரைக்கின்ற கல்வாரி அன்பு வேறு! இதை, ஒளியிலிருந்து இருளைப் பிரித்து காண்பதைப்போல் காணாவிட்டால், நாம் நிச்சயமாய் சூழ்நிலையின் நெருக்கத்தில் தடுமாறுவோம் என்பதை உணர்ந்தேன்!*

*"அவர்களுக்காக* **அக்கினிமயமான பிரமாணம்** *அவருடைய வலது கரத்திலிருந்து புறப்பட்டது. மெய்யாகவே அவர் ஜனங்களை சிநேகிக்கிறார்" என்ற வசனம் என்னை இந்த வேளையில் புடமிட்டது! அன்பு என்ற பெயரில் குற்றங்களைக் கண்டும் காணாமல் விட்டு விடுவது அவரது அக்கினி பிரமாணத்திற்கு முரணானது என்பதில் தெளிவு பெற்றேன். அதுபோலவே அவர்களின் குற்றங்களுக்காக ஆத்திரமடைவதும், 'ஜனங்களை சிநேகிக்கவில்லை' என்ற உண்மையும் எனக்குத் தெளிவானது.*

தேவனோ, தம் ஜனத்தை நேசித்தபடியால் அவர்களை "அக்கினிமயமான வார்த்தைகள் அல்லது பிரமாணங்களைக் கொண்டு" சிட்சிக்கிறார். இந்த இரண்டில் ஒன்றையாகிலும் சேதப்படுத்துவது கல்வாரி அன்பில்லை! என உணர்ந்தேன்.

*கிறிஸ்துவைப்போன்ற "பிதாவின் வீட்டைக் குறித்த பக்தி வைராக்கியம் அவரைப்பட்சித்தது" என்ற வாசகம் என்னில் முழுமையாய் நிறைவேற, கிறிஸ்துவின் சிலுவை அடிவாரத்தின் தூசியில் என் முகம் புதைத்தேன்!*

*– ஏமி கார்மைக்கேல்*

---

## ஒரு சீஷனாகாமல், ஒருவரையொருவர் நேசிப்பது கைகூடாது!

***நா****ன் பல வருடங்களாய் "நான் இயேசுவின் சீஷன்" என்பதற்குரிய நிரூபணம் "ஒருவரையொருவர் நேசிப்பதே" என எண்ணினேன்! ஏனென்றால், இயேசு கூறும்போது "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று எல்லோரும் அறிந்து கொள்வார்கள்" என கூறியுள்ளார் (யோவான்.13:35). நான் போகும் சபையிலுள்ள சகோதர சகோதரிகளை அன்புகூர்ந்து விட்டால் 'நான் ஒரு சீஷன் என நிரூபித்ததாக' எண்ணிக் கொண்டேன். ஆனால் நீங்கள் இந்த வசனத்தை கவனித்து வாசிக்கும் போது "கிறிஸ்தவரல்லாதவர்களின்*

*கண்ணோக்கின்படி" நம்மை இயேசுவின் சீஷர்களாக அறிந்து கொள்ளும் 'சாட்சியே' இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது!*

*ஆனால், ஆரம்ப நிலையில் இயேசுவின் சீஷனாய் இருப்பதற்கு "நம்முடைய சுயத்தை வெறுத்து, மற்றும் நம் சுய-சித்தத்தை சிலுவையில் அறைவதையே" முக்கிய நிபந்தனையாக இயேசு கூறினார் (லூக்கா.9:23). இந்த பகுதியில்தான்,* **நீங்கள் "இயேசுவின் சீஷர்களாயிருக்கிறீர்களா?"** *என ஒருவரும் காணமுடியாத "உங்கள் இருதயத்திலும், உங்கள் அந்தரங்க ஜீவியத்திலும்" தேவன், உங்களை முதலாவதாக காண வேண்டியதாயிருக்கிறது! நீங்கள் மெய்யாகவே, அனுதினமும் உங்களை வெறுத்து வாழ்வதை தேவன் காணும்போது நீங்கள் "***லூக்கா.9:23 கிறிஸ்தவன்***" என தேவன், உங்களுக்கு அங்கீகார முத்திரையைத் தருவார்! இது ஒன்றே, ஒரு கிறிஸ்தவனின் மெய்யான தரமாகும். அவ்வாறாகவே வேதமும் "சீஷர்கள், கிறிஸ்தவர்கள் என அழைக்கப்பட்டார்கள்" (அப்.11:26) என கூறுகிறது!*

**இதற்குப் பிறகே,** *நீங்கள் இயேசுவின் சீஷனாய் இருப்பதை, உங்களைச் சுற்றியுள்ள உலகம், சாட்சியாய் காணும் பகுதியாய் "சீஷர்களாகிய நீங்கள் ஒருவரையொருவர் நேசிக்கும்" பகுதி வருகிறது!*

> 'தேவனோடு கொண்ட உறவைக்' காட்டும் சிலுவையின் 'செங்குத்துமரமே' எப்போதும் முதலாவதாய் இருக்கிறது என்பதை கவனியுங்கள்!


*தேவன் மீதுகொண்ட உங்கள் அன்பையே, அவர் அங்கீகரித்து முத்திரையிட வேண்டும். ஆகவே, உங்கள் ஸ்தலசபையில் உள்ளவர்களை நீங்கள் அன்புகூருகிறபடியால் "உங்களை இயேசுவின் சீஷனாய்" ஒருபோதும் எண்ணி வஞ்சிக்கப்படாதிருங்கள்! இவ்வாறாக, பிறரிடம் கொண்ட "மனுஷீக அன்பு" உங்களை ஒரு சீஷனாக எண்ணும்படி வஞ்சித்து விடமுடியும்.*

*ஞாயிற்றுக் கிழமைகளில் "மற்ற விசுவாசிகளை சந்திக்கும் அன்பு" நீங்கள் ஒரு சீஷன் என்பதற்கு நிரூபணம் அல்ல! 'விசுவாசிகளை சந்திக்கும் ஞாயிற்றுகிழமை' என்பதை பிரதானமாகக் கொள்ளாமல்.... திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய எல்லா நாட்களிலும் உங்களை ஒரு சீஷனாய் நிரூபிப்பதே முக்கியமாகும்! அந்த நிரூபணத்திற்கு, இயேசுவின்மீது கொண்ட ஊக்கமான அன்பினிமித்தம் உங்களை வெறுப்பதும், ஒவ்வொரு நாளும் அவருடைய முகத்திற்கு முன்பாக ஜீவிப்பதுமேயாகும்!*

*– சந்தோஷ் பூணன்*

## ஸ்தேவான், (AD 36)

### இயேசுவின் முதல் இரத்த சாட்சி ஸ்தேவான்!



அந்த விசாரணை கூடத்தில் துணிவுடன் நின்ற அந்த வாலிபன் எடுத்துரைத்த பிரசங்கத்தை யூத மார்க்கமும், ஆசாரிய சங்கமும் மிகுந்த ஆச்சரியத்தோடு அதே சமயம் கோபத்தோடும் கேட்டு கொண்டிருந்தார்கள். பேசிக்கொண்டிருந்த அந்த வாலிபன், தன் சத்தத்தை உயர்த்தி "இந்த ஆசாரிப்பு விசாரணை சங்கத்தில் கூடியிருக்கும் உங்கள் யாவரையும் பார்த்து நான் கூறும் தேவ செய்தியைக் கேளுங்கள்: இனி எத்தனை காலம் பரிசுத்த ஆவிக்கு விரோதமாக போராடிக் கொண்டிருப்பீர்கள்? வணங்கா கழுத்துள்ள ஜனங்களே, உங்கள் முன்னோர்கள் செய்ததைப் போலவே தீர்க்கதரிசிகளை கொலை செய்கிறீர்கள்! இப்போதும், உங்களிடம் வந்த நீதிபரனை வெறுத்து அவரை கொன்றீர்கள்! உங்கள் கையில் வேதாகமத்தை வைத்துக்கொண்டே, அதை கைக்கொள்ள மறுக்கிறீர்கள்" என அந்த விசாரணை அரங்கம் அதிர வல்லமையாய் இயேசு கிறிஸ்துவை பிரசங்கித்தார். அந்த இளைஞனின் பெயர் 'ஸ்தேவான்!'.

அதைக் கேட்ட ஆசாரிய மார்க்கத்தாரும், யூத ஜனங்களும் பற்களை கடித்து அவன் மேல் கடுங்கோபம் கொண்டார்கள். ஆனால், ஸ்தேவான் என்ற அந்த யூத வாலிபனோ, அவர்களுடைய கோபத்தை பொறுட்படுத்தாமல், வானத்தை அண்ணார்ந்து பார்த்து "இதோ, வானம் திறக்கப்பட்டதை காண்கிறேன்! நான் உங்களுக்கு பிரசங்கித்த 'மனுஷகுமாரன்' அந்த இயேசு இரட்சகர் பரலோகத்திலே தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்பதை காண்கிறேன்! நீங்கள் கொலை செய்த மனுஷகுமாரனாகிய இயேசு இரட்சகர் 'தேவனுடைய வலது பாரிசத்தில்' நிற்கிறார் என்ற ஸ்தேவானின் ஓங்கிய குரலைக் கேட்டவுடன், இன்னமும் அதிக கோபம் கொண்டு, மூர்க்கமாய் ஸ்தேவானிடத்தில் சென்று, அவரைப் பிடித்து, கல்லெறிந்து கொல்லும்படி நகரத்திற்கு வெளியே இழுத்துச் சென்றார்கள்! அவரை இழுத்துச் சென்ற பாதை முழுவதும், கூடி வந்த ஜனங்களிடம் இரட்சகரைக் குறித்து பிரசங்கித்துக் கொண்டே சென்றார்.

அங்கு நின்ற தர்சு பட்டணத்து சவுல் என்ற இளைஞன் ஆணையிட்டவுடன், அவன் பாதபடியில் தங்கள் மேலங்கிகளை களைந்துவிட்டு, ஸ்தேவானை கல்லெறிந்து கொன்றார்கள்.

"பிதாவே இவர்களுக்கு மன்னியும்! தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்! என் ஆவியை உம்மிடத்தில் ஒப்புவிக்கிறேன்!" என்ற எதிரொலியோடு நிசப்தம் உண்டானது!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## வாலிபனே, நித்திய வாழ்வின் பங்கு உன் கையில் உள்ளது!

இம்மை வாழ்வுக்குப்பின், ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டு இடங்கள் முத்திரிக்கப்பட்டிருக்கின்றன. 1) மோட்ச வாழ்வு 2) நரக வாழ்வு. பூவுலகத்தில் ஜீவிக்கும் போதே தேவனுடைய இரக்கமான கிருபையைக் கொண்டு, இவைகளில் ஏதாகிலும் ஒன்றை அவன் தெரிந்து கொள்ளலாம். ஆனால், அவன் இந்த உலக வாழ்வை விட்டுப் பிரிந்த பின்னர், மறுமையில் இந்த தெரிந்துகொள்ளுதலை அவன் செய்திட முடியாது. இம்மையை விட்டு அவன் கடந்து சென்றபின் "எந்த இடத்திற்குப் போய் சேருகின்றானோ" அங்கேயே, முடிவற்ற யுகாயுகங்களாக அவன் இருக்க வேண்டும். அங்கு சென்ற பின், அவன் தன் வாழும் இடத்தை மாற்றிக்கொள்ள முடியாது!

மோட்ச வாழ்வை தெரிந்து கொண்டு, மனந்திரும்பி இயேசுவின் இரட்சிப்பை அடைந்தவர்களுக்கு, இந்த பூமியில் கிடந்து அழுந்தித் துயருறும் எந்தவித நோயோ, துன்பமோ, மோட்சம் என்ற அந்த ஜீவனுள்ளோர் தேசத்தில் இல்லை! மாய்மாலமும், முகஸ்துதியும், பொறாமையும், பொய்யும், மூர்க்கமும் அங்கில்லை! திருடரும், கொடியரும், பேராசைக்காரரும், பொருளாசைக்காரரும், சோம்பேறிகளும், அடங்காதவர்களும், வஞ்சகர்களும் அந்தப் பரிசுத்த பூமியில் இருக்கமாட்டார்கள்! மூப்பும் - சாக்காடும் அங்கில்லை! மனிதர்கள் பயப்பட ஏதுவான எதுவும் அங்கில்லை!

நரக வாழ்வை தெரிந்து கொண்டு, மனம் போனபடி பாவ இன்ப வாழ்க்கை வாழ்ந்தவர்கள், பங்கடையும் ஸ்தலத்தில், அக்கினியும் கந்தகமும் கலந்து ஜுவாலித்து எரிந்து கொண்டிருக்கும்! அந்த நரக பாதாளத்தைக் காரிருள் எப்பொழுதும் மூடியிருக்கும்! துர்நாற்றம் நிறைந்த புயல்களும், சூறாவளிகளும் இங்கு சதா வீசிக்கொண்டிருக்கும்! நரகத்தில் கிடப்போர் எல்லாரும் ஒருவரையொருவர் கடுமையாகப் பகைத்துக் கொண்டிருப்பதுடன்..... பாவத்தை தங்கள் நெஞ்சில் உருவாக்கி, பூமியை சாபத்தீடாக்கி, தங்களையும் எரிநரகத்தில் தள்ளிய பிசாசையும் தொடர்ந்து சபித்துக்கொண்டிருப்பார்கள்!

மனுஷீக வார்த்தைகளினால் விவரிக்க முடியாத அளவு, விதவிதமான கொடிய வேதனைகளையும், பாடுகளையும் நரகத்தில் ஒரு ஆத்துமா அனுபவிக்க வேண்டும்!

வாலிபனே, உன் இளமையின் வஞ்சகத்தில் வீழ்ந்துவிடாமல், மனந்திரும்பி உன் இரட்சகரை நாடு! இந்த நல்ல வாய்ப்பு உன்னை விட்டு தாமதமாவது ஆபத்து என்பதை தயவாய் அறிந்து கொள்!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்
Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.